செ. கு. எண்: 018 நாள்: 03.02.2019

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின்

## 30–வது சாலைப் பாதுகாப்பு வார வாழ்த்துச் செய்தி

பொதுமக்களிடையே சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் ''சாலைப் பாதுகாப்பு வாரம்'' கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு, 30–வது சாலைப் பாதுகாப்பு வார விழா, 4.2.2019 முதல் 10.2.2019 வரை **''சாலை பாதுகாப்பு – உயிர்ப் பாதுகாப்பு''** என்ற கருப்பொருளை மையப்படுத்தி கடைபிடிக்கப்படும்.

இச்சாலை பாதுகாப்பு வார விழாவில், தலைக்கவசம் அணிவது குறித்த விழிப்புணர்வு, சீட் பெல்ட் அணிவது குறித்த விழிப்புணர்வு, ஓட்டுநர்களுக்கு இலவச மருத்துவ முகாம்கள், சாலைப் பாதுகாப்பு உறுதிமொழி ஏற்றல், பள்ளி, கல்லூரிகளில் மாணவ, மாணவியர்களுக்கு சாலை பாதுகாப்பு விதிகள் குறித்த போட்டிகள் நடத்தி பரிசு வழங்குதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, சாலையில் பயணிக்கும் பயணிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்திட, ஒவ்வொரு ஆண்டும் சாலை பாதுகாப்புக்கென 65 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, சாலைப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொண்டு வருவதுடன், அகில இந்திய வானொலி பண்பலை சேவைகளின் மூலம் நாள்தோறும் சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு வாசகங்களை ஒலிபரப்பு செய்தல், அவசர விபத்து சிகிச்சை மையங்கள் ஏற்படுத்துதல், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் ரோந்து குழுக்கள் ஏற்படுத்தி போக்குவரத்து விதிமீறல்களை கண்காணித்து நடவடிக்கை எடுத்தல், இளம் சிறார்களுக்கு சாலைப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தி, பாதுகாப்பாக சாலையை பயன்படுத்துவதற்காக, அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சாலைப் பாதுகாப்பு மன்றங்கள் துவக்குதல் போன்ற திட்டங்களை சிறப்பான முறையில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தியதன் காரணமாக, 2017–ஆம் ஆண்டைவிட 2018–ஆம் ஆண்டு, **சாலை விபத்துகள் 3 சதவிகிதம் குறைந்துள்ளதுடன், சாலை விபத்துகளினால் ஏற்படும் இறப்புகள் 25 சதவிகிதம் குறைந்துள்ளது.**

சாலைப் பாதுகாப்புப் பணிகளை மேலும் ஊக்குவிக்கும் வகையில், இந்த ஆண்டு முதல், விபத்துகளையும், உயிரிழப்புகளையும் குறைக்க சிறப்பான நடவடிக்கை எடுக்கும் முதல் மூன்று மாவட்டங்களுக்கும், ஒரு சிறந்த காவல்துறை ஆணையரகத்திற்கும் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விருது** வழங்கப்பட உள்ளது.

தமிழ்நாடு அரசு, பல்வேறு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டாலும், சாலை விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்புகளை தவிர்க்க பொதுமக்கள் அனைவரும் மிதமான வேகத்துடன் வாகனங்களை இயக்கி, வாகனங்களில் பயணம் செய்வோர் தலைக்கவசம் மற்றும் சீட் பெல்ட்களை அணிந்து, வாகனங்களை ஓட்டும்போது கைபேசியை உபயோகப்படுத்தாமல், சாலை விதிகளை முழுமையாக கடைபிடித்து, விலைமதிப்பற்ற தங்களின் உயிர்களை பாதுகாத்து **விபத்தில்லா தமிழ்நாட்டை** உருவாக்கிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**